
### தமிழ் நிலப்பரப்பின் தொன்மையை

# உலகுக்கு எடுத்துரைக்கும் தொல்லியல் ஆய்வுகள் தொடர வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

தென்காசி, ஜூலை 15-

தென்காசி மாவட்டம், மலையடிப்பட்டியில் நடைபெற்று வரும் முக்கிய தொல்லியல் அகழாய்வுப் பணிகளை முன்னாள் தொல்லியல்துறை அமைச்சரும், திருச்சுழி சட்டமன்ற உறுப்பினருமான தங்கம் தென்னரசு நேற்று நேரில் பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது, அகழாய்வுத் தளத்தில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறு தொல்பொருட்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் குறித்து தொல்லியல் ஆய்வாளர்களிடம் விரிவாகக் கேட்டறிந்த அவர், சுமார் ஈராயிரம் ஆண்டுகள் பழமையான சங்ககாலத்தைச் சேர்ந்த செங்கற்களால் கட்டப்பட்ட படிக்கட்டுடன் கூடிய கிணற்றையும் பார்வையிட்டார்.



முன்னதாக தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அறிவிக்கப்பட்டு, கடந்த மூன்று மாதங்களாக தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த அகழாய்வில், வாழ்விடப் பகுதி மற்றும் ஈமப் பகுதி ஆகிய இரண்டு முக்கியப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த அகழாய்வில், கீழடி உள்ளிட்ட சங்ககாலத் தளங்களுக்கு ஒப்பான செங்கல் கட்டுமான சுவடுகள், கண்ணாடி மணிகள், கருப்புசிவப்பு நிறப் பானை ஓடுகள், காதணிகள், விளையாட்டுக் காய்கள் உள்ளிட்ட ஏராளமான தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும், நுண்கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை தொடர்ச்சியான மனித வாழ்விடத்திற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பது இந்த அகழாய்வின் சிறப்பம்சமாகும்.

இந்நிலையில், இது குறித்து எக்ஸ் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள தங்கம் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, தென்காசி மாவட்டம், மலையடிப்பட்டியில் திமுக ஆட்சியில் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வரும் தொல்லியல் அகழாய்வுப் பணிகளை நேற்று நேரில் பார்வையிட்டு, அங்கு கண்டறியப்பட்டுள்ள தொல்பொருட்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் குறித்து தொல்லியல் ஆய்வாளர்களிடம் கேட்டறிந்தார்.

மக்கள் வாழிவிடப் பகுதியில் அமைந்திருந்த ஈராயிரம் ஆண்டுகள் பழமையான செங்கல் படிக்கட்டுக் கிணறு, கீழடியின் கண்டுபிடிப்புகளுக்கு ஒத்த கட்டுமானச் சுவடுகள், கருப்புசிவப்பு பானை ஓடுகள், கண்ணாடி மணிகள் உள்ளிட்ட பல்வேறு தொல்பொருட்களின் கண்டுபிடிப்பு, இப்பகுதியின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் வெளிப்படுத்துகிறது.

வரலாற்றில் பல்வேறு காலங்களில் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளைக் கொண்டுள்ள தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டி அகழாய்வு, கீழடி மற்றும் ஆதிச்சநல்லூரைப் போல தமிழ்நாட்டின் தொன்மையான வரலாற்றுக்கு புதிய வெளிச்சம் பாய்ச்சும் முக்கியத்துவம் வாய்ந்த அகழாய்வாக அமையும் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழ் நிலப்பரப்பின் தொன்மையையும், தமிழர் நாகரிகத்தின் வரலாற்றையும் அறிவியல் சான்றுகளுடன் உலகிற்கு எடுத்துரைக்கும் இதுபோன்ற தொல்லியல் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

### ஒற்றை ஆட்சி – ஒற்றை மதம் – ஒற்றை மொழி என்று

# அரசமைப்புச் சட்டத்தையே தலைகீழாக மாற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 15-

வரும் 20-ஆம் தேதி கூடும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் பி.ஜே.பி.யின் அஜெண்டாக்களை நிறைவேற்றும் வகையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிக்கட்டுமானத்தையே தகர்க்கும் சட்டங்களை நிறைவேற்ற பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்டுள்ளது. அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து இவற்றை முறியடிக்க வேண்டும் என்றும், தி.மு.க. மீது களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகள், சூழ்ச்சிகள் எடுபடாது என்றும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

வருகிற ஜூலை 20-ஆம் தேதியன்று தொடங்கவிருக்கும் நாடாளுமன்றத் கூட்டத் தொடர் ஆகஸ்ட் 13-ஆம் தேதி வரை நடைபெறவிருக்கிறது. மற்ற கூட்டத் தொடர்களைவிட, இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர், குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் உள்ளிட்ட பெரும் பொறுப்பாளர்கள் அத்துணைப் பேரும் பதவியேற்பின் போது, பிரமாணம் எடுத்துக்கொண்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினையே புறந்தள்ளி, அதன் முக்கிய தனித்தன்மையான அடையாளத்தினையே மாற்றி, ஜனநாயகக் குடியரசு என்பதையும், மக்களிடம் இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை (Basic Structure of the Constitution) அடிக்கட்டுமானத்தையே அடியோடு மாற்றி, (கரையான் அரித்த நூலின் வெறும் அட்டை போல் ஆக்கிட பெரும் முயற்சி நடக்கிறது.) பார்லிமெண்டரி முறைக்குப் பதிலாக, அதிபர் முறைக்கு ஈடாக, பிறகு ஒரு "சர்வாதிகாரத்திற்கு'' நாடாளுமன்ற முறை மூலமே ஏற்பாடு செய்யும் ஒரு சூழ்ச்சித் திட்டமாக்குவதற்கான எல்லா முயற்சிகளுக்கும் கால்கோள் விழா நடத்திட முனைகிறது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசு.

**சூழ்ச்சி மூலம் ஆட்சியைப் பிடித்த இயக்கம்!**

பாபர் மசூதியை இடித்து அயோத்தி கோயில் திட்டத்தை நிறைவேற்றியதுபோல, அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தங்கள் மூலம், அண்ணல் அம்பேத்கரின் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைத்து, பன்வகைக் கலாச்சாரம், மொழி, நாகரிகம், பல சமூகங்கள் - மக்கள் வாழும் நாட்டினை, மூன்று முறை இந்திய ஜனநாயக அரசால் தடை செய்யப்பட்டு, பிறகு பேச்சுவார்த்தை - உறுதிமொழி மூலம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட - அவ்வப் பொழுது உருமாற்றம் (Camouflague) நடத்தி 'வித்தைகள்', 'வியூகங்கள்' மூலம் தந்திரம், சூழ்ச்சிமூலம் ஆட்சியைப் பிடித்த ஓர் இயக்கமாம் ஆர்.எஸ்.எஸ்.சின் கொள்கையான ஒற்றை மதம் - தன் மதம் - ஹிந்து மதம், ஒற்றை மொழி தம் மொழி - சமஸ்கிருதம், ஹிந்தி, ஒற்றைக் கலாச்சாரம் தமது கலாச்சாரம் - ஆரியக் கலாச்சாரம் முதலிய வற்றை வைத்து, ஆளத் திட்டமிட்டுக் காய் நகர்த்திடும் வகையில், சட்டத் திட்டங்களையே நிறைவேற்றிட முயற்சிக்கிறது.

**வியூகம் வகுக்கும் பா.ஜ.க.!**

அரசியலமைப்புச் சட்டத்தில், முக்கிய திருத்தங்களுக்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு (2/3 - Two thirds majority) உறுப்பினர்களை நாடாளுமன்ற இரு அவைகளிலும் பெற முடியாவிட்டாலும், கட்சிகளை உடைத்தும், இணைத்தும், வேறு சில எதிர்க்கட்சிகளைத் திரிசூலங்களான வருமான வரித்துறை, சி.பி.அய்., அமுலாக்கத் துறை மூலம் அச்சுறுத்தியும், மற்றும் "பஞ்சு மிட்டாய்களைக்'' காட்டியும், தனது இலக்கை அடைய நாளும் வியூகம் வகுத்து வருகிறது!

அதற்கு, இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடர்தான் அதிமுக்கியம். ஆர்.எஸ்.எஸ். தத்துவகர்த்தா கோல்வால்கர் கூறியபடி, மாநிலங்களே இல்லாத (கூட்டாட்சிக்குப் பதில்) ஒற்றை ஆட்சி - Unitary ஆட்சியை நிலை நிறுத்தி, மாநில அதிகாரப் பறிப்பை, கல்வி, உணவு, ஆளுமை போன்ற பல துறைகளிலும் ஏற்படுத்தி, 'ஹிந்துராஷ்டிரம்' அமைக்க, ஏற்பாடுகள் சட்டத்தைக் கருவியாக்கி, சிறுபான்மை மக்களான இஸ்லாமிய, கிறித்துவ சமூகத்தினரின் குடியுரிமை மற்றும் வாழ்வுரிமை, கல்வி, மருத்துவக் கொடை உரிமை உள்பட அனைத்தையும் பறிக்கும் சட்டங்கள் - திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டும், நிறைவேற்றப்படவுமான 'வியூகம்' வேக வேகமாகத் திட்டமிடப்பட்டுள்ளன!

முன்பு மூன்றில் இரண்டு பங்கு கிட்டாத காரணத்தால், தமிழ்நாடு, மேற்கு வங்காளம், கேரளம், அசாம் போன்ற மாநிலச் சட்டமன்றத் தேர்தலின்போதே அவசர அவசரமாக நாடாளுமன்றத்தினைக் கூட்டி, 33 சதவிகித மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவோடு திட்டமிட்டே - தொகுதி மறுவரையறை மசோதாவையும் பொருத்தமில்லா இணைப்பாக்கி, ஆழம் பார்த்து, அம் முயற்சியில் தோற்றனர்.

**பா.ஜ.க. திட்டம் தோற்கடிக்கப்பட்டது!**

அதனால், தி.மு.க. வுக்குத் தனி மரியாதை இந்தியா முழுவதும் ஏற்பட்டது! பா.ஜ.க. திட்டம் தோற்கடிக்கப்பட்டது. அது தெரிந்தே தேர்தல் பிரச்சாரத்திற்கு ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்று அதனைத் தேர்தலின்போது நடத்தியது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஒன்றிய ஆட்சி.

தற்போது கல்வித் திட்டத் திணிப்பு, ஒரே நாடு ஒரே தேர்தல், ஏழை உணவு பாதுகாப்புச் சட்ட மசோதா (திருத்தம்) போன்ற பல திட்டங்கள் கொண்டுவரப்பட உள்ளன. அத்துடன், நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் ஒரு மாநில முதலமைச்சர், அமைச்சர்கள் தம் பதவியை இழந்தவுடனே சிறையில் அடைக்கப்படுவதற்கான (ஏற்கனவே பா.ஜ.க. ஆட்சியில் வேறு வடிவங்களில் இது நடந்து வரும் நிலையில்) புதிய வியூகமும் வகுக்கப்பட்டு வருகிறது. தற்போது இதற்கு முழுமையான சட்ட சம்மதம் பெற்றுத் தரும் புதிய வியூகம் முதலியன வரவிருக்கின்றன.

**தி.மு.க.விற்குப் களங்கம் ஏற்படுத்த மறைமுகமான ஏற்பாடுகள்!**

மற்ற கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிளவுபடுத்தியது - காரணம் வெளிப்படை. தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை பொருளாகவோ அல்லது குதிரை பேரம் பேசுபவர்களாகவோ 'அவதாரம்' எடுக்க வைக்க முடியாது என்று தெரிந்தும், அவர்களது பெயரைக் கெடுக்கத் திட்டமிட்டு, தி.மு.க.விற்குக் களங்கம் ஏற்படுத்த மறைமுகமான ஏற்பாடுகள் நடந்துவிட்டதுபோல, ஒரு திட்டமிட்ட முறையில் ஒரு வதந்தி, பரப்புரை (Whispering Campaign) இணையதளம் மற்றும் ஆரிய ஏடுகள் வழி நடத்தப்படுகிறது. இத்தகைய சூழலில் தி.மு.க தலைமை நிச்சயம் முழு உறுதியுடன், தனது லட்சியப் பாதையில் மாறாப் பயணத்தில் நிலைத்து நின்று வென்று காட்டும் என்பதை நாடு அறிய வேண்டும்.

சில ஆரிய பார்ப்பன ஏடுகளும், ஊடகங்களும், தி.மு.க.விற்கு ஒரு 'பழி' ஏற்படுத்த இத்தகைய பிரச்சாரத்தினைச் செய்கின்றனர். "நாடாளுமன்றத்தில், அதன் நிலைப்பாடு முந்தையது போல இருக்காது'' என்று கூறுவதை, "பொய்யாய், பழங்கதையாய், கனவாகிப் போகும்படி'' காட்டும் என்பதை உரிமையுடன் நம்புகிறோம்.

தனித்தனியாக நின்றாலும், ஒரே முடிவில் வென்று காட்டவேண்டிய தருணம் இது!

அனைத்து எதிர்க் கட்சிகளும், "யார் வரக்கூடாது'' என்பதையே ஒரே திட்டமாக்கி, தனித்தனியாக நின்றாலும், ஒரே முடிவில் வென்று காட்டவேண்டிய தருணம் இது! அலட்சியம் காட்டினால், 'இந்தியா' இருக்காது; மாறாக, 'ஹிந்துயா'தான் இருக்கும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பழநி ஆண்டவருக்கே மொட்டை போடும்

# த.வெ.க. ரியல் எஸ்டேட் அரசு!

பழநி, ஜூலை 14-

பழநி ஆண்டவன் பூங்கா சாலையில், கடந்த கால சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு திமுக ஆட்சியில் 2025-ம் ஆண்டு மீட்கப்பட்டு, பக்தர்களின் வாகன நிறுத்தமாக மாற்றப்பட்ட ரூ.100 கோடி மதிப்பிலான 1.40 ஏக்கர் கோயில் நிலத்தை, வெறும் ரூ.2 கோடிக்குத் தாரை வார்த்திருக்கிறது தவெக அரசு!

கடந்த ஜூலை 6-ஆம் தேதி, பழநி இணை சார்பதிவாளர் பணி மாறுதலான அந்த ஒருநாள் இடைவெளியைத் தந்திரமாகப் பயன்படுத்தி, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி இந்த இமாலய முறைகேடு அரங்கேற்றப்பட்டுள்ளது; இது தவெக அரசின் நிர்வாகச் சீர்கேட்டை அப்பட்டமாகக் காட்டுகிறது.

நிலப் பதிவு முடிந்த அடுத்த நொடியே, அந்த அதிகாரிக்குப் பதவி உயர்வு வழங்கி வெகுமதி அளிக்கப்பட்டிருப்பது, இது அரசின் நேரடித் துணையோடு திட்டமிட்டு நடத்தப்பட்ட 'கொள்ளை' என்பதை உறுதிப்படுத்துகிறது.




இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் அவர்களே! கேமரா முன்னால் கோயில் ஆய்வுகளை ரீல்ஸாகப் படம்பிடித்து நாடகமாடும் நீங்கள், திரைக்குப் பின்னால் நிலத் தரகராகச் செயல்பட உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

முந்தைய ஆட்சியில் சுமார் ரூ.1,316 கோடி மதிப்பிலான கோயில் சொத்துகள் மீட்கப்பட்ட நிலையில், இன்று நீங்கள் ஒரு ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் போலக் கோயில் நிலங்களைத் தனிநபர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பது எந்த வகையில் நியாயம்?

பொறுப்பேற்ற இரண்டே மாதத்தில் பழநி ஆண்டவருக்கே மொட்டை போடும் உங்கள் இந்த அட்ராசிட்டியை ஆன்மீக பக்தர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

### த.வெ.க. ஆட்சியில் – நெல்லை ராதாபுரம்

# சார்பதிவாளர் அலுவலகம் நள்ளிரவில் திறப்பு!

## பொதுமக்கள் அதிர்ச்சி

நெல்லை, ஜூலை 15-

நெல்லை மாவட்டம் ராதாபுரத்தில் செயல்பட்டு வரும் சார்பதிவாளர் அலுவலகத்தில் தினந்தோறும் ஏராளமான பத்திரப்பதிவு நடைபெற்று வருகிறது. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் சிலர் போலி ஆவணங்கள் மூலம் சொத்துக்களைப் பதிவு செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக, கடந்த ஏப்ரல் மாதம் மாவட்ட காவல் துறை குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் தற்போது நள்ளிரவு நேரங்களிலும் பத்திரப் பதிவு அலுவலகம் திறந்து சில நில புரோக்கர்கள் உள்ளே சென்று வருவதாகவும் லஞ்ச பணம் பெருமளவு பங்கு பிரிப்பதாகவும் கூறப்படுகிறது. இதனால், ஆள் மாறாட்டம் மற்றும் போலி ஆவணங்கள் மூலமாக நிலங்களைப் பறிமுதல் செய்யும் சட்டவிரோதப் பதிவுகள் அதிகமாக நடக்க வாய்ப்புள்ளதாக நில உரிமையாளர்களும் பொதுமக்களும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக பதிவுத்துறை உயர் அதிகாரிகளும், காவல்துறையும் உரிய விசாரணை நடத்தவேண்டும் என்று பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.



நாகர்கோவில் மாநகராட்சியின் குப்பை கொட்டும் இடமான வல்லங்குமாரவிளை குப்பை கிடங்கில் திடீரென தீப்பற்றியது மூன்று தீயணைப்பு நிலையங்களில் இருந்து வண்டிகள் வந்து தீயை அணைக்க போராடி வருகிறார்கள். இந்தநிலையில் சம்பவ இடத்துக்கு வந்த நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின் தீயணைப்பு துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறையிடம் விபரங்கள் கேட்டறிந்து தீயை விரைந்து அணைக்க கோரிக்கை வைத்தார் உடன் மாநகராட்சி மேயர் மேரி பிரின்ஸி லதா, மண்டலத் தலைவர் அகஸ்டினா கோகில வாணி மாநகராட்சி தலைமை பொறியாளர் ரகுராமன் மாநகர திமுக செயலாளர் ஆனந்த் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் கல்லூரணி ஊராட்சி மன்றம் சார்பில் கல்லூரணியில் ஊராட்சி மன்றம் மற்றும் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இந்த முகாமை தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் துவக்கி வைத்தார். இதில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் .சிவபத்மநாதன், ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார், தொழிலதிபர் சேவியர் ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாக்ரடீஸ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எல்லாம் குமார் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர். இந்த முகாம் மூலம் 100 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண் பரிசோதனை மேற்கொண்டு பயனடைந்துள்ளனர்.